★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE:

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: சித்திரை 20உ புதன் (2—5—56) ★ ★ வெளியூர்: சித்திரை 21உ வியாழன் (3—5—56) [இதழ் 274

டிக்கெட் இல்லா பிரயாணம்

இந்திய இரயில்வேக்களுக்கு ரூ. 3 கோடி நஷ்டமா

புதுடில்லி, மே 1—

டிக்கெட் இன்றி பிரயாணம் செய்பவர்களினுல் இந்திய இரயில்வேக்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2 கோடி முதல் ரூ. 3 கோடி வரை நஷ்டமாகிறதாம்.

இந்த மதிப்பீடுகூட மிகக் குறைவானது என்றும் கருதப்படுகிறது.

1955—56-ம் ஆண்டிற்கான இரயில்வே மதிப்பீட்டுக் குழு

(4-ம் பக்கம் பார்க்க)

மே விழாவில் பொதுச்செயலாளர் முழக்கம்

பல்லாயிரம் மக்கள் அணிவகுப்பு

'வளைந்த வாழ்வினர் விடுதலை பெற திராவிடம் மீள வேண்டும்'

இரா. நெடுஞ்செழியன் கருத்துரை

"வளைந்து நெளிந்து கிடப்பவர்கள் உரிமை முழக்கமிடும் நாள் மே தினம்!

"'வாழு—வாழவிடு' என்ற உயரிய கோட்பாட்டை உலகின் பல்வேறு பகுதிகளிலும் வாழ்பவர்கள் இன்று ஆர்வம் பொங்க, உணர்ச்சி கொப்பளிக்க முழங்கிக் கொண்டிருப்பார்கள்.

"அவனியோர் போற்றும் இந்த மே திருநாளில்தான், உலகெங்கணுமுள்ள மக்கள் தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ளவும், நிறைகளைப் பெறவும், மீண்டும் புத்துணர்ச்சியோடு பாடுபட முனைவார்கள்.

"விளாடிவாஸ்டாக்கிலிருந்து சான்பிரான்சிஸ்கோ வரையில்—டோக்கியோவிலிருந்து லண்டன் வரையில்—எங்கெல்லாம் உழைப்பாளர் பெருமக்கள் இருக்கிருர்களோ அங்கெல்லாம்—இன்று அவர்கள் அணி திரண்டு, விர முழக்கமிடுவர், 'மே விழா வாழ்க'வென!

"மே விழா, உழைப்பாளர்களுக்கு—பாட்டாளிகளுக்கு—உரிமைகளைப் பெறப் போரிடுவதற்கு பெரும் தூண்டுகோலாக அமையும் விழாவாகும்.

"இன்று, உலகெங்கணுமுள்ள உழைப்பாளர்கள், இதுவரை பெற்றுள்ள ஓரளவு உரிமைகள் எல்லாம்—முதலாளிகளாகவோ, அரசாங்கங்களாகவோ தாமாகவே கருணையுள்ளத்தால் வழங்கியவை அல்ல!

"இன்று தொழிலாளர்கள்—பாட்டாளிகள் அனுபவிக்கும் சிறிதளவு உரிமைகள்கூட ஏராளமான 'காவு' கொடுத்த பின்தான், உயிர்களைப் பலி தந்து, இரத்த ஆறுகளை உண்டாக்கித் தந்தபின்தான் கிடைத்தவையாகும்.

"எட்டு மணி நேரம் மட்டுமே வேலை செய்வோம்—என்று குரல் எழுப்பியவர்கள் புரிந்த மகத்தான தியாகத்தின் நினைவு நாள் தான் மே தினம். இன்று எட்டு மணி நேரம் மட்டுமே வேலை என்ற உரிமையை அனுபவிக்கும் உலகத்து மக்கள் அனைவரும் இந்த உரிமையைப் பெறத் தியாகம் புரிந்த—இரத்தம் சிந்திய தொழிலாளர்களுக்கு வீர வணக்கம்—நன்றி செலுத்துகிருர்கள்.

"ஆண்டை எதைச் செய்யச் சொல்கிறதோ, அதை எல்லாம் செய்யவேண்டும்; ஆண்டை, 'இந்தா, ஊசிப்போன பண்டம் என்று எதைத் தருகிறதோ, அதை உண்டுகொள்ள வேண்டும்' என்று உழைப்பாளர்களுக்கு விதியிருந்த காலம் ஒன்று இருந்தது. இன்று அது மாறி, 'எனக்கு இன்னின்ன வேண்டும்; இவ்வளவு வேலைதான் செய்வேன்; இவ்வளவு நேரம்தான் உழைப்பேன்' என்று கூறுகிற நிலைமை வளர்ந்திருக்கிறது. என்ருலும், உழைப்பாளர்கள் இன்னும் முழு உரிமை பெற்றவர்களாக ஆகிவிடவில்லை.

"காண்பதெல்லாம் செய்துதரும் தொழிலாளர்கள், காணத்தகுந்தது வறுமையாம்; அவர்கள் பூணத் தகுந்தது பொறுமையாம் என்ற நிலை, இன்னும் இருக்கத் தான் செய்கிறது.

"இன்று உலகில் 'சக்திக்கேற்ற உழைப்பு—தேவைக்கேற்ற வசதி' என்ற சமதர்மக் கோரிக்கை வலுத்துவருகிறது. அந்தக் கோரிக்கையில்தான், தொழிலாள மக்களின் நல்வாழ்வு அடங்கியிருக்கிறது.

"அதுபோன்றதொரு சமுதாயம் அமைய வேண்டுமென்று விரும்புவதுதான் தி.மு. கழகம். திராவிடர்கள்—பாட்டாளிகள், உழைப்பாளிகள்; அவர்கள் சீறியதோர் நல்வாழ்வு பெறுவதற்காகத்தான் தி. மு கழகம் பாடுபடுகிறது. திராவிட மக்களின் சகலதுறை விடுதலைக்காகவும் போராடும் தி. மு. கழகம், இந்த மே விழாவினைச் சிறப்புறக் கொண்டாடுகிறது.

"இந்த மே விழாவில், தி. மு. கழகம் நாட்டவருக்குக் கூறுவதெல்லாம், 'திராவிடர் வாழ, அவர்களது எதிர்காலம் சிறப்பாக உருப்பெற, தாயகம் விடுதலை பெற்ருக வேண்டும்; அதற்காக, ஏற்கனவே ஆயிரமாயிரமாகத் தி. மு. கழக அணிவகுப்பில் திரண்டிருக்கும் பாட்டாளிகள்—தொழிலாளர்கள், மேலும் பல்லாயிரமாகப் பெருக வேண்டும்'—என்பதைத் தான்,"

—என்று, தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், சென்னை திருவல்லிக்கேணிக் கடற்கரையில், சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற ஒரு மாபெரும் மே விழாப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

★

நிகழ்ச்சி:

சென்னை மாவட்ட தி. மு. கழகத்தினர் சிறப்புற ஏற்பாடு செய்திருந்த மே விழாப் பொதுக்கூட்டம், திருவல்லிக்கேணிக் கடற்கரையில், 1—5—56 இரவு 7 - மணி அளவில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு, தோழர் கோ. செங்குட்டுவன் முன்மொழிய தோழர் சுந்தரமூர்த்தி வழிமொழிய, சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் தோழர் இளம்பரிதி தலைமை தாங்கினர்.

முன்னுரையில், தலைவர், மே தின வரலாறு குறித்தும், தி. மு. கழகம் மே தின விழாவில் கலந்து கொள்ளும் முக்கியத்துவம் குறித்தும் பேசினர்.

அடுத்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

மாபெரும் மே தின ஊர்வலம்

பல்லாயிரவர் கலந்து கொண்ட மாண்புமிகு காட்சி

வழிநெடுகிலும் இலட்சிய முழக்கம்

மேதினி புகழ் மே விழாவை ஒட்டி, சென்னை மாவட்ட தி. மு கழகத்தவர் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடத்தினர்.

மாவட்டத்தில் உள்ள கழகக் கிளைகள், கழகப் பற்றுடைய மன்றங்கள், படிப்பகங்கள் எல்லாம், ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

அவர்கள் மே தினம் குறித்து தி. மு. கழகக் கருத்தை தெளிவாக விளக்கி அரியதோர் உரை நிகழ்த்தினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

துவக்கத்தில் கழகத் தோழர்கள் இயக்கப் பண் பாடினர். (ச.-கி.)

சென்னை மாவட்டச் செயலாளர் தோழர் இளம்பரிதி தலைமை தாங்கி ஊர்வலத்தைச் சிறப்புடன் நடத்தினர்.

இராயபுரம் 'அறிவக'த்திலிருந்து மாலை 4 மணியளவில் புறப்பட்ட அந்த மாபெரும் ஊர்வலத்தில், ஆயிரக் கணக்கான பாட்டாளிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் மாணவர்கள் எல்லாம் அணிவகுத்து வந்தனர்.

ஊர்வலம், இராயபுரம் பிராட்வே, கொத்தவால்சாவடித் தெரு, தங்கசாலைத்தெரு, சென்ட்ரல் ஸ்டேஷன், சிந்தாதிரிப்

(4-ம் பக்கம் பார்க்க)

'தென்னட்டில் பொதுவுடைமைக் கொள்கையைப் பரப்புவோர் தி. மு. கழகத்தவரே'

குடியேற்றம் மே விழாவில் என். வி. நடராசன்

குடியேற்றம், மே. 1—

"திராவிடத்தில்—தென்னகத்தில் பொதுவுடைமைக் கொள்கையை பரவச் செய்து உண்மையிலேயே அக்கொள்கை வெற்றி பெறப் பணியாற்றி வருவது திராவிட முன்னேற்றக் கழகமேயாகும். இன்னும் சொல்லப்போனல், திராவிடத்தைப் பொறுத்தவரை நடைமுறையில் பொதுவுடைமைக் கட்சியாக இயங்கிவருவதும் திராவிட முன்னேற்றக் கழகமேயாகும்.

"பொதுவுடைமைக் கொள்கை மிக மிகச் சிறந்ததுதான்;

(4-ம் பக்கம் பார்க்க)

'பொலிட்பீரோ'வில்!

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் புதிய 'பொலிட்பீரோ'வில் ஈ. எம். எஸ். நம்பூத்ரிபட், அஜாய்கோஷ். பி. இராமமூர்த்தி, எஸ். ஏ, டாங்கே, இராஜேசுவரராவ், பி. சுந்தரையா, டாக்டர் இசட். ஏ. அகமத், பூபேஷகுப்தா, அரேகிஷன் சாஜித் ஆகியோர் அங்கம் வகிப்பார்களெனத் தெரியவருகிறது.

பூபேஷ்குப்தா என்பார், ரேனன் சென்னுக்குப் பதிலாக புதிதாக சேர்க்கப்பட்டிருக்கிருராம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழகம்: அறிக்கை—7/56

பொதுத் தேர்தல் குறித்து வாக்கெடுப்பு

பொதுத்தேர்தலில் தி. மு. கழகம் கலந்து கொண்டு போட்டியிட வேண்டுமா அல்லது வேண்டாமா என்பது குறித்து, மாநில மாநாட்டிற்கு வருகை தருவோரின் பொதுவான கருத்தை அறியும் வாக்கெடுப்பு முறை, 19—5—56 சனியன்று காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணிக்குள் நடைபெறும். நுழைவுச் சீட்டு உள்ள ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வாக்குரிமைச் சீட்டு தரப்படும்.

தி. மு. கழகம்
பொதுத் தேர்தலில் போட்டியிட

வேண்டும்	
வேண்டாம்	

இப்படி அமையும் சீட்டில் அவரவர் விருப்பத்திற்கிணங்க எதிரிலுள்ள கட்டத்தில் X அடையாளம் இட வேண்டும்.

மாநாட்டுப் பந்தலில் தனியே வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் வாக்குரிமைச் சீட்டைப் போட வேண்டும்.

'அறிவகம்,'
சென்னை—13
2-5-1956

இரா. நெடுஞ்செழியன்
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★-★★★★-★★★★★★★★★★-★★★★★★★★★★-★★

தெரிந்து கொள்ளுங்கள்!

நியூயார்க், ஏப். 29—

'சீனவில்தான் மக்கட் தொகை அதிகம். அங்கு 58 கோடி 20 இலட்சம்பேர் வாழ்கின்றனர்.

"இந்தியாவின் மக்கள் எண்ணிக்கை 37 கோடி 70 இலட்சம்.

"ஆசியாவின் மக்கட் பெருக்கம் ஆண்டிற்கு 210 இலட்சம் வீதம் அதிகரிக்கிறது.

இந்தியாவில் 82·1 சதவிகிதம் பேருக்கு எழுத்தறிவு கிடையாது,"

என்று, உலக மக்கள் தொகை குறித்து ஐ. நா. வெளியிட்டுள்ள புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளது.

விலக்களிக்கப்படுகிறது

பனை வெல்லத்திற்கு ஏப்ரல் 1-ம் தேதி முதல் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுவதாக சென்னை அரசினர் அறிவிக்கின்றனர்.

வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, மத்திய சமூகநல போர்டு ஏற்படுத்தியுள்ள 259 கமிட்டிகளுக்கு திட்ட நிலையங்களுக்கான கட்டடங்களை நிர்மாணிப்பதற்காக போர்டு மொத்தம் ரூ. 8,96,000 வழங்கியுள்ளது.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 2—5—'56 புதன்

நேரு பண்டிதர் உணருவாரா?

ஆங்கில மொழி குறித்து இந்தியப் பிரதமர் நேரு பண்டிதர், புதுடில்லிக் கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ள கருத்துக்கள் ஊன்றிக் கவனித்தற்குரியனவாகும்.

'இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும், விரிவான உபயோகத்திற்கும் ஆங்கிலம் குறுக்கே நிற்பதாகக் கூறப்படும் வாதத்தை நான் ஏற்றுக் கொள்வதற்கில்லை,' என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் தொடர்ந்து பேசும்போது, 'இந்திய மொழிகளுடன் சமதையாக ஆங்கிலத்தைக் கருத முடியாதென்றாலும்........' என்றும் கூறியிருக்கிறார்.

ஆங்கிலம், தனியொரு மொழி என்ற முறையில் இன்று உலகில் அதிகமான பேருக்குப் புரியக்கூடிய ஒரு மொழியாகும். இப்படி ஒரு தனிச் சிறப்பை—உலகத்தின் இதர மொழிகளுக்குக் கிடைக்காத தனிச் சிறப்பை—ஆங்கிலம் எய்தியதற்குப் பல்வேறு காரணங்களிருக்கலாம்; அவையெல்லாம் ஆராய்ச்சிக்குரியன; ஆனால், ஆங்கிலம் பெற்றிருக்கும் இந்தத் தனிச் சிறப்பை, இன்றும் உலகில் பிறிதோர் மொழி பெறவில்லை என்பது மட்டும் உண்மை. இதனை, பண்டித நேருவும் ஒப்பியிருக்கிறார். இந்த உண்மையை சுட்டிக்காட்டித்தான், அவர், 'ஆங்கிலம் தொடர்ந்து இந்தியாவில் இடம் பெற்றிருக்க வேண்டும்' என்று வாதிடுகிறார்.

'உலகத்தோடு தொடர்பு கொள்ள, இந்தியாவிலேயே பல்வேறு மக்களோடும் பழக, உலகில் வேகமாக வளரும் சிந்தனைகளோடு தொடர்புகொள்ள, ஆங்கிலத்தில் உள்ள அறிவுச் செல்வத்தைப் பெற்றுப் பயனடைய, ஆங்கிலத்தை நாம் கைவிட்டுவிடக்கூடாது,' என்று அழுத்தமாகப் பேசியிருக்கிறார்.

ஆங்கிலம்நீடிப்பதால், அதன் பெருமை குறித்துப் பேசுவதால், இந்தி வளரமுடியாது—இந்தி ஆதிக்கம் படரமுடியாது போய்விடுகிறதே என்று வருந்தும் வடநாட்டுப் பேராசைக்கார இந்தி வெறியர்கள் பண்டிதரின் இந்த உபதேசத்திற்கு எவ்வளவு செவி மடுப்பார்கள் என்பது நாம் அறிந்ததே!

ஆங்கிலம் ஆயிரம் சிறப்புகளுடையதாயிருந்தாலும், அது அன்னிய மொழி என்பதால், இயற்கையாகவே நாட்டவருக்கு அதன்மேல் எழக்கூடிய ஒருவகை அதிருப்தியைப் புகலிடமாகக் கொண்டு வடநாட்டு இந்தி வெறியர்கள், ஆங்கிலத்தை இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து அடியோடு ஒழித்துவிட அவசர அவசரமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதையும், அந்த நடவடிக்கைகளுக்குப் பின்னால், இந்தியப் பேரரசின் மானசீக ஆதரவு தேங்கிக் கிடக்கிறது என்பதையும் நாம் கூறத் தேவையில்லை. ஆங்கிலத்தின் பெருமை பற்றிப் பேசும் பண்டிதர்களே — அதன் அருமையையும், அதனைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்றும் உபதேசிக்கும் பண்டிதர்களே, 'இந்திய தேசீய மொழி வளர்ச்சி' என்ற பெயரால், அரசாங்கத் துறைகள் அனைத்திலும், ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியைத் திணித்து வருவதையும் நாம் இங்கு பன்முறையும் எடுத்துக் காட்டி இடித்துரைத்திருக்கிறோம்.

'இந்திய மொழிகளோடு சமதையாகக் கருத முடியாது ஆங்கிலத்தை' என்று பண்டித நேருவே பேசுவதற்குக் காரணம், அவரது மொழியான இந்தி, ஆங்கிலத்தைவிட உயர்ந்தது என்பதால் அல்ல; மாறாக, ஆங்கிலம், இந்திய மண்ணிற்கு அன்னியமானது என்பதுதான்.

'விஞ்ஞானத் துறையைப் பொறுத்து, ஆங்கிலத்திற்குப் பதிலாக, இந்தியை இடம் பெறச் செய்வது என்ற பேச்சே கூடாது,' என்று, இந்திய விஞ்ஞான கழகத்தின் செயலாளர் கடந்த கிழமையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இப்படி விஞ்ஞானத் துறையில் மட்டுமின்றி, இன்றைய இருபதாம் நூற்றாண்டு வாழ்வின் சகல துறைகளிலும், ஆங்கிலம் வளமடைந்து, பயன் பல தருவதாக இருக்கிறது என்பதை எவரும் மறுப்பதற்கில்லை; பண்டித நேருவும்கூட மறுத்துரைக்கக் காணோம்.

ஆனாலும், அத்தனை சிறப்பும் பயனுமுடைய வளமானதோர் மொழியான ஆங்கிலம், அன்னிய மொழி என்ற ஒரே காரணத்திற்காக, இந்திய மொழிகளுடன் சமதையாக இருக்க முடியாது என்று பண்டிதர் கூறுகிறார். அவரின் இதே கருத்தை நாம், இந்தி விவகாரத்தில் கொண்டால் தவறென்ன என்பது நமக்குப் புரியவில்லை.

நவீன கால அறிவு அத்தனையும் தரும் வளமான ஆங்கிலம் எப்படி அன்னிய மொழியோ—எந்த அளவுக்கு அன்னிய மொழி என்று கருதப்படுகிறதோ, அப்படித்தான், தென்னாட்டவருக்கு, குறிப்பாகத் தமிழருக்கு இந்தியும் அன்னிய மொழியாகும்.

இந்தியைவிட எல்லாவகையாலும் வளமான ஆங்கிலம், வடவருக்கு அன்னிய மொழி என்பதால்—ஆகாது என்று தோன்றுமானால், தமிழைவிட எவ்வகையாலும் எள்ளத்தனையும் சிறப்பில்லாத இந்தி, தமிழருக்கு அன்னிய மொழி என்பதில் குற்றமென்ன?

பெரும்பாலானவர்களால் பேசப்படுகிறது என்பதாலேயே இந்தி, இந்தியாவின் பொது மொழியாகும் வாய்ப்பைப் பெற்றது என்று பிதற்றுகிறவர்கள் பண்டிதரின் வாதத்தை ஊன்றிக் கவனித்தால், இந்திமட்டும் இந்தியாவிற்குப் போதுமானதல்ல என்பதை உணரமுடியும்.

ஆங்கிலமும் வேண்டும் என்று பேசும் பண்டிதர், அது குறித்தும் இந்தி பற்றியும் தென்னாட்டவர்—திராவிடர்—தமிழர் கொண்டுள்ள கருத்தை உணர முன்வருவாரா?

'இந்தி மொழி வளர்ச்சிக்கு ஆங்கிலம் நீடிப்பது இடையூறல்ல'

'உலகத் தொடர்புக்கு அது இன்றியமையாதது'

பண்டிதர் வழங்கும் கருத்து

"ஆங்கில மொழி இந்திய மக்களுக்கும் மற்றும் உலகிலுள்ள மக்களுக்கும் ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள வசதியா இருக்கிறது. ஆங்கிலத்தைப் புறக்கணித்து விடுவதானது, அம்மொழியினல் நமக்குக் கிடைத்திருக்கிற அளவிடற்கரிய அறிவுச் செல்வத்தைப் புறக்கணிப்பதற்கு ஒப்பானதாகும்.

"காலா காலத்தில் இந்தியப் பொதுமொழி வளர்ச்சியுறும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு; ஆனல், இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கும் உபயோகத்தித்திற்கும் முட்டுக்கட்டையாக ஆங்கில மொழி இருக்கிறது என்று கூறப்படுகிற வாதத்தை நான் ஒப்புக் கொள்ளமாட்டேன்.

"இந்திய மொழிகளின் வளர்ச்சியைப் பொறுத்த வரையில், இரண்டு காரணங்களுக்காக வடநாட்டு மக்கள் அதிகமாகக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்திய நாடு முழுமையிலும் வடநாடுதான் பெரும்பான்மை யிடம் பெற்றிருப்பதும், வட இந்திய மொழிகளே பெரும்பான்மையாகப் பேசப்பட்டு வருவதும்தான் இதற்குக் காரணமாகும். இவ்வாறு கூறுவதால், தென்னகத்து மொழிகளைவிட வட இந்திய மொழிகள் சிறப்பு மிக்கவை என்பதாக யாரும் கருதிவிடவும் கூடாது.

"நாடு முழுமையிலுமுள்ள மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் அயல் மொழியான ஆங்கிலத்தில் பேசுவது விரும்பத் தகாதது என்றாலும், இந்தப் பிரச்சினைக்கு இதைவிடத் தறபோது வேறு எந்தப் பரிகாரமும் இல்லையென்பதையும் அவர்கள் உணரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்திய மொழிகளுடன் ஒத்ததாக ஆங்கிலத்தை வைத்துக் கொள்ளாவிட்டாலும் கூட, இன்றைய சூழ்நிலைகளில் ஆங்கிலமொழி கண்டிப்பாகப் பேசப்பட்டே ஆகவேண்டு மென்பதையும் உணர வேண்டும்.

"ஆங்கில மொழிமீது ஏன் சிலருக்கு வெறுப்பும் அச்சமும், ஏற்படுகிறது என்பதை என்னல் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆங்கிலம் புறக்கணிக்கப்படுகிறபோது, அதனல் கிடைக்கக்கூடிய அறிவுப் பெட்டகத்தை என்றென்றும் இழக்கவேண்டியிருக்கும்.

"மேலும், இன்றைய நிலையில் உலக முழுமையிலும் பரவியிருக்கிற ஒரே மொழி ஆங்கில மொழியானதால், நம்முடைய நாட்டைவிட்டு அயல் நாடுகளுடன் தொடர்பு கொள்ளவேண்டியவர்கள் இயற்கையாகவே ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டியவர்களாகின்றனர்.

"ஆங்கில மொழியை இந்திய நாட்டு மொழிகளுக்கு ஒத்த நிலையில் வைத்திருக்க வேண்டுமென்பது எங்கள் குறிக்கோள் அல்ல; என்றாலும், மக்கள் சபையிலும், பிற இடங்களிலும் ஆங்கில மொழிதான் பயன்படுகிறது. நம்முடைய குறிக்கோள் பற்றி நாம் நன்றாகத் தெரிந்திருக்கும்போது ஆங்கில மொழியை உபயோகிப்பது குறித்து ஏன் அச்சப்பட வேண்டுமென்பது பற்றி எனக்கு ஒன்றும் புரியவில்லை,"

இவ்வாறு இந்தியப் பிரதமர் நேரு, புதுடில்லியில் நடைபெற்ற வானொலி இலக்கியக் கழகக் கூட்டத்தில் பேசுகையில், இந்தியாவில் ஆங்கில மொழி நிலை குறித்துப் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார்

மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"விஞ்ஞான, தொழில் நுணுக்க கலை வெகுவேகமாக முன்னேறி வருகின்ற இந்த உலகத்தில், உலகில் நடைபெறுகின்ற அபிவிருத்திகளில் இந்தியாவும் இடைவிடாத தொடர்பு கொண்டிருக்க வேண்டுமென்பது மிக முக்கியமானதாகும். இந்தியா தனக்கெனச் சொந்தமாக வழி முறைகள் வகுத்திருக்கிறது. இந்தியா செய்திருக்கிற மாற்றங்களும், அபிவிருத்திகளும் உண்மையிலேயே சுயமானதாக இருக்குமானல், இந்தியாவின் முன்னேற்றப் பாதையையும், இந்திய மொழிகளையும் தெரிந்துகொள்ள மற்ற நாடுகளும் முன்வரும் என்பதில் சந்தேகமே இல்லை.

"நாம் ஓரளவிற்கு, நம்மைப் பிற நாட்டவர் தெரிந்துகொள்வதற்கான வழி முறைகளை ஏற்கனவே வகுத்துவிட்டிருக்கிறோம். இன்னும் அதிகமாக நம்மை உலகத்திற்குத் தெரியப்படுத்திக் கொள்ள வேண்டுமென விருப்பப்பட்டால், நம்மைப் பிறர் புரிந்து கொள்ளும் முறையில் நம் மொழிகளை வளர்த்தாக வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வேலையை வானொலி செவ்வனே செய்துமுடிக்கும் என நான் நம்புகிறேன். எனவே, நம்மை உலகத்தவருக்கு மேலும் மேலும் அறிமுகப்படுத்திக் கொள்ள விரும்பினல், வெளி உலக மொழிக்காக கண்டிப்பாகப் பயின்றே ஆகவேண்டும். அந்த முறையில் ஆங்கில மொழியை மேலும் அதிகமாகத் தெரிந்து கொள்வதோ, தெரிந்து கொள்ள முற்படுவதோ நமக்கு எளிதுதான்.

"ஆங்கில மொழியை நாம் தெரிந்திருக்க வேண்டுவது முக்கியமானதுதான். ஆங்கில மொழி தவிர மற்ற நாட்டு மொழிகளான ஜெர்மனி, பிரெஞ்சு, ரஷ்யா, சீன மொழிகளைக்கூட நாம் கற்றிருக்க வேண்டும். எனவே, நமக்கு ஆங்கில மொழிமீது எந்தவிதமான வெறுப்புணர்ச்சியும் தோன்றத் தேவையே இல்லை; நமக்கு முக்கியத் தேவையாக உள்ள மொழிகளின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக ஆங்கில மொழி வந்துவிட்டதாகவோ, அல்லது இனிமேல் வரும் என்றோ நாம் வீணாக அச்சப்பட வேண்டியதில்லை."

நகர சபை ஊழியர்கள்

'அனுமதியின்றி மறுமணம் செய்துகொள்ளக் கூடாது'

'பம்பாய் நகரசபை ஊழியர்கள் எவரும் ஒரு மனைவி இருக்கும்போது, நகரசபை அதிகாரிகள் அனுமதியின்றி மறுமணம் செய்துகொள்ளக்கூடாது' என்று அறிவித்து, பம்பாய் நகரசபை சிப்பந்திகள் ஒழுக்கங்களில் புதியதோர் விதியொன்று சேர்க்கப்படவிருக்கிறதாம்.

சென்னையில் மேலும் இரு பொறியியல் கல்லூரிகள்

திட்டம் தீட்டியிருக்கிறதாம் சர்க்கார்

மதுரை, ஏப். 29—

சென்னை மாநிலத்தில் மேலும் இரண்டு பொறியியல் கல்லூரிகளைத் திறக்க மாநில சர்க்கார் திட்டம் வகுத்திருப்பதாக அமைச்சர் சேதுபதி தெரிவித்திருக்கிறார்.

ஆனல், சென்னை கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியை மத்திய சர்க்காரிடம் ஒப்படைத்துவிடுவதென மாநில சர்க்கார் இறுதி முடிவு மேற்கொண்டு விட்டனர் என்ற தகவலையும் தந்திருக்கிறார், அந்த அமைச்சர்.

நவீன நீர்மூழ்கி கப்பல்கள் கண்டுபிடிப்பு?

வாஷிங்டன், ஏப். 29—

300 அடி ஆழத்தில் கடலின் கீழ் இருந்துகொண்டு, நீர் மட்டத்தில் 140 மைலுக்கு அப்பாலுள்ள கப்பல்களை 'ராக்கெட் — டார்பிடோ' மூலம் சுட்டு வீழ்த்தக்கூடிய நீர்மூழ்கிக் கப்பல்களை ('சப்மரீன்') ரஷ்யா கண்டு பிடித்திருப்பதாக இதழ் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ளதாம்.

அமெரிக்காவும் இத்துறையில் ஆராய்ச்சி செய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்திக்கு இதுவேறு கேடா?

புதுடில்லி, எப். 30—

10 'வால்யூம்'களில் இந்தியில் ஒரு கலைக்களஞ்சியம் தயாரிக்கும் பொறுப்பு காசி நாகரி பிரச்சார சபையிடம்ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தத் தகவல் மக்கள் சபையில் தரப்பட்டிருக்கிறது.

எவ்வளவு தாராளம்?

அப்பளம் உற்பத்திச்சாலை ஒன்றை நிறுவுவதற்கென சென்னை அரசினருக்குக் கடனாக ரூ. 13,096 வழங்க இந்தியப் பேரரசினர் அனுமதித்துள்ளனராம்.

இக்கடனுக்கு ஆண்டுக்கு 4 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படுமெனவும், இத்தொகை 10 சரிசமமான தவணைகளில் திருப்பிக் கொடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

உங்கள் குறிப்புக்கு!

அசோகச் சக்கரம் பொறிக்கப்படாத 'கரன்சி' நோட்டுகள் இன்னும் 6 திங்கள் மட்டுமே செலாவணியுள்ளவையாக இருக்கும்; அதற்குப் பின்னர், இந்த நோட்டுகளை ரிசர்வ் பாங்கியிலோ, சர்க்கார் கஜானாக்களிலோதான் மாற்ற முடியும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அளவுக்கும் அதிகமாக பிணியாளர்கள்!

டாக்டர்களுக்கு மருத்துவ மனை அதிகாரியின் கோரிக்கை

சென்னை, ஏப். 30—

அனுமதிக்கப்படவேண்டிய அளவுக்கும் அதிகமாக சென்னை 'ஜெனரல்' மருத்துவ மனையில், நோயாளிகளின் எண்ணிக்கை இருப்பதால், இனி கொடிய நோய் வாய்ப்பட்ட பிணியாளர்களையே அனுமதிக்க வேண்டுமென்று டாக்டர்களை மருத்துவ மனை அதிகாரி கேட்டிருக்கிறாராம்.

அனுமதியின்றி சர்க்கரை தயாரிக்கத் தடை

சென்னை, ஏப். 30—

அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெறாமல் கரும்பிலிருந்து சர்க்கரை தயாரிக்கக் கூடாதென சென்னை அரசினர் உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

கழகச் செய்திகள்

சென்னை 18-வது வட்ட தி. மு. கழகம்

13—4—56ல், தோழர் சா. கோ. நாராயணசாமி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், கழகத் தோழர் வி கே. சண்முகம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், கழகச் சார்பில் அமைக்கப்படுகிற நூல் நிலையத்திற்கு மறைந்த இயக்கத் தோழர் மு து. அருணாசலம் அவர்களின் பெயரிடுவதென்று முடிவு செய்யப்பட்டு, வரவு-செலவுக் கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன.

சென்னை—28-வது வட்ட தி. மு. கழகம்

22—4—56 காலை 11 மணிக்கு, தோழர் சி. டி. டி. அரசு இல்லத்தில், தோழர் கே. கோவிந்தசாமி தலைமையில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. 28-வது வட்ட தி. மு. கழகத்திற்கு, இட வசதிக்கு வேண்டிய ஏற்பாடு குறித்தும், பத்திரிகை அன்பளிப்பவர்களின் பெயரை ஏற்றும், மாநில மாநாட்டிற்குப் பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்தும், மாநாட்டிற்கு அனுப்பவேண்டிய தீர்மானம் பற்றியும் முடிவுகள் செய்யப்பட்டன.

மாயூரத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

20—4—56 மாலை 6 மணிக்கு தோழர் து. காசிநாதன் தலைமையில், மாயூரம் நகரப் பூங்காவில் தி. மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் என். கிட்டப்பா, பொ. தருமன், தில்லை-வில்லாளன் ஆகியோர் பேசிய பின், துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தற்கால அரசியல் நிலை குறித்தும், சென்னை மந்திரி சபையின் போக்கை விவரித்தும் பேசினார்.

இறுதியாக அண்ணா அவர்கள் மாநில மாநாடு பற்றியும், கழகம் மேற்கொள்ளவிருக்கிற நடவடிக்கைகள் பற்றியும் தெளிவுரையாற்றினார்.

அண்ணா அவர்களுக்கும், துணைப்பொதுச்செயலாளர் என். வி. நடராசனுக்கும் உள்ளூர்—வெளியூர் கழகங்கள், படிப்பகங்கள், மன்றங்கள் ஆகியவைகளால் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

பேரணைப்பட்டியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

சொக்குப்பிள்ளைபட்டி தி. மு கழகக் கிளையின் சார்பில், 24-4-56-ல் பேரணைப்பட்டியில் பன்னீர்செல்வம் திடலில்(வைகையில்) ஓர் பொதுக்கூட்டம் தோழர் 'சுதர்சனம்' தலைமையில் நடைபெற்றது. தோழர் கோவிந்தன் இன்னிசை வழங்கினார்.

தோழர் மா. வேலன் சிறிது நேரம் பேசிய பின், தோழர் முகதா ஐந்தாண்டுத் திட்டப்புள்ளி விவரங்களையும், நாட்டுப் பிரிவினை குறித்தும் பேசினார். தோழர் மா. நெடுஞ்செழியன் நன்றி நவின்றார்.

முத்துப்பேட்டையில் தி.மு. கழக பொதுக்கூட்டம்

19—4—56 இரவு 8 மணிக்கு, முத்துப்பேட்டை வ. எஸ். என். திடலில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம் தோழர் ந. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. நடராசன், மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ ஆகியோர் பேசினர். இறுதியாகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் மாநில மாநாடு நடைபெறுவது பற்றியும், அதில் அனைவரும் கலந்துகொள்வதின் அவசியம் பற்றியும் விளக்கிப் பேசினார்.

புதுவை- ஓர்லெயான்பேட் தி. மு. க. ஆண்டு விழா

22—4—56 இரவு 7 மணியளவில், மேற்படி கழக 2-ம் ஆண்டுத் தொடக்க விழா, தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. லோகநாதன் குழுவினர் இசை விருந்தளித்தனர். தோழர்கள் கோ. பாண்டியன், செ. கோவிந்தராசன் ஆகியோர் பேசியபின்னர், தோழர் கி. மனோகரன் இயக்கக் கொள்கைகள் குறித்தும், மாற்றுக் கட்சிகளின் போக்கு பற்றியும் சொற்பொழிவாற்றினார். கூட்டத்திற்கு ஏராளமான மக்கள் வந்திருந்தனர்.

அன்று காலை 9 மணிக்கு கழகத்தில், தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமையில், தோழர் செ. கோவிந்தராசன் கழகக் கொடி ஏற்றிவைத்தார். சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. பகலில் ஏழைகளுக்கு கஞ்சி வார்க்கப்பட்டது.

சங்கரநயினார்கோவில் தி. மு. கழகம்

24—4—56 மதியம் 2 மணியளவில் தோழர் டி. ஆர். எஸ். தலைமையில் கழகச் செயற் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, 17-8-55 முதல் 24-4-56 வரையுள்ள கழக வரவு-செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் சம்மந்தமான முக்கியத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

விளாப்பாக்கத்தில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

26-4-56 இரவு 7-30 மணியளவில், இவ்வூர் அண்ணா மைதானத்தில், தோழர் தி. கு. நாகநாதன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் போளூர் சுப்பிரமணியம், ஏ. எல். சி கிருஷ்ணசாமி ஆகியோர் சமுதாயம்-அரசியல் பற்றிப் பேசினர்.

தேசுமுகிப்பேட்டை தி. மு. கழகம்

21-4-56 பிற்பகல் 3 மணிக்கு, தோழர் ஆ. இரத்தினவேலு தலைமையில் கழகச் செயற் குழு கூட்டம் நடைபெற்றபோது, தோழர் தி. ர. கோவிந்தராசு அவர்கள் மகன் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

ஆந்திராவிலும் ஒரு குட்டி கும்பமேளா!

10 இலட்சம்பேர் கலந்து கொள்ளும் 'கோதாவரி புஷ்கரம்'

இராஜமகேந்திரபுரம், மே 1—

மே 3-ந் தேதி முதல் ஜூன் 2-ந் தேதிவரை இங்கு நடைபெறும் 'கோதாவரி புஷ்கரம்' எனும் விழாவின்போது' சுமார் 10 இலட்சம் 'யாத்திரீகர்'கள் வரக் கூடும் என்று கூறப்படுகிறது.

'புஷ்கரம்' என்ற இந்தத் திருவிழா, வழக்கமாக 12-ஆண்டுகளுக்கு ஒரு முறை கொண்டாடப்படுவதாம்—கும்பமேளா, மகாமகம் போல!

12 நாட்களுக்கு மட்டுமே வழக்கமாக இந்த விழா நடைபெறுவதாம்; ஆனால், இந்த ஆண்டு விழா, 30 நாட்களுக்கு நடைபெறுமாம்; காரணம், விழாவின்போது பலதரப்பட்ட கருத்துடைய பண்டிதர்களும் கலந்து கொள்வதற்காகத்தான் என்று கூறப்படுகிறது.

ஆந்திர சர்க்கார் இவ்விழாவிற்காக ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள் என்றும், சுமார் 5 இலட்சம்பேர் 'புஷ்கரம்' நடைபெறும் இடத்திலேயே தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மாதுங்கா—பம்பாய் தி.மு. கழகம்

19—4—56 காலை 9½ மணிக்கு, மாதுங்கா தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் இலாவியா கட்டிடத்தில் தோழர் பொன்-திர. சபாபதி தலைமையில் நடைபெற்ற போது, கடந்த கூட்ட நிகழ்ச்சிகள் கடிதப் போக்குவரத்துக்கள் ஆகியவைகளை தோழர் எஸ். எஸ். பாண்டியன் வாசித்தார். கழக இரண்டாம் ஆண்டு விழா வரவு-செலவு கணக்கு சரிபார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்னர், மாநில மாநாட்டுப் பிரதிநிதிகளாகத் தோழர்கள் யோ. தருமராசன், அன்புச் செழியன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், கழகத்தின் எதிர்கால ஆக்கவேலைக்கான பல முக்கியமானத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நெடுங்குளம் தி. மு. க.

24—4—56-ல், நெடுங்குளம் நாட்டவாய்க்கால் மணற்பரப்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் இரத்தினவேலு, சின்னப்பா, இராமசாமி, சௌந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் மாநில மாநாடு பற்றியும், தற்கால அரசியல் நிலை குறித்தும் விளக்கிப் பேசினர்.

'விஞ்ஞான அறிவுபெற ஆங்கிலம் தொடர்ந்து நீடிக்கவேண்டும்'

இந்தித் திணிப்புக் குழுவிற்கு இந்திய விஞ்ஞானக் கழகம் அறிவுறுத்தல்

"விஞ்ஞானப் பயிற்சி, ஆராய்ச்சித் துறையைப் பொறுத்தமட்டில் ஆங்கில மொழிக்குப் பதில் இந்தி மொழியைத் திணிப்பதானது நாட்டின் தொழில், விஞ்ஞானத்துறை வளர்ச்சியைப் பெரும் அளவில் பாதிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்திவிடும்."

இவ்வாறு, இந்திய விஞ்ஞானக் குழுவினர், மொழிக் குழுவினருக்கு அறிவுறுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது,

இந்தியா முழுமையிலுமுள்ள விஞ்ஞானக் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஆங்கில மொழிதான் விஞ்ஞானத் துறையில் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று தெரிவித்திருப்பதாகவும், இந்தியக் கலாச்சாரங்களில் ஆங்கில மொழியும் ஒரு உறுப்பாக இருக்க வேண்டுமென விரும்புவதாகவும் மேற்படி கழகத்தின் பொதுச்செயலாளர் யு. பி. பாசு என்பார் பத்திரிகைச் செய்தி ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"விஞ்ஞானக் கருத்துக்களேயானாலும், பிற கருத்துக்களேயானாலும் அவற்றை எடுத்துக்கூறுவதற்கான ஒரு சாதனமாக ஆங்கில மொழி மட்டுமே இதுவரை மனிதனால் உபயோகிக்கப்பட்டு வந்திருக்கிறது.

"விஞ்ஞான அறிவு பெற சிறந்த வாய்ப்பாக ஆங்கிலம் இருக்கிறது; ஆனால், அத்துறையில் இந்திய மொழிகளுக்கும்—ஆங்கில மொழிக்குமிடையே கணக்கிட முடியாத தொலைதூரம் இருக்கிறது.

"மேலும், இந்தியாவில் தலைதூக்கியுள்ள மொழி வெறியை எதிர்த்துப் போரிடுவதற்காக, ஆங்கிலம் தொடர்ந்து இங்கு நீடிக்க வேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்" என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

டெல்லி சர்க்காரின் புதி[illegible] தொழில் கொள்கை

முக்கிய அம்சங்கள் குறித்து பிரதமர் நேரு

புதுடில்லி, ஏப். 30—

புதிய தொழில்கள் நிர்மாணிப்பது, போக்கு-வரத்து வசதிகளை அதிகரிப்பது ஆகியவற்றில் இனி சர்க்காரே அதிகமான பொறுப்புகளை மேற்கோள்ளுவது என்ற புதியதோரு தொழில் கொள்கையை இந்தியப் பிரதமர் பண்டித நேரு மக்கள் சபையில் வெளியிட்டிருக்கிறார்.

புதிய கொள்கையின் அம்சங்களை அவர் விளக்கியதிலிருந்து தொகுத்து சாரமாகக் கீழே தரப்படுகின்றன :—

வெளிநாட்டு வியாபாரத்தையும் இனி அதிகமான அளவில் சர்க்காரே ஏற்று நடத்துவர்.

அதேபோது, பொருளாதார விஸ்தரிப்பை முன்னிட்டு, தனியார்துறைத் தொழில்கள் வளரவும் வாய்ப்பிருக்கும்.

இயன்ற தொழில்களில் கூட்டுறவு முறை அமுல் செய்யப்படும்; தனியார்துறைத் தொழில்களிலும் கூட்டுறவுமுறை அதிகமான அளவு கடைப்பிடிக்கப்படும்.

புதிய கொள்கைப்படி, தொழில்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்படும் :—

1. எதிர்காலத்தில் வளர்ச்சியுறவேண்டிய தொழில்கள் சர்க்காரின் முழுப் பொறுப்பிலிருக்கும்.

2 இந்த இரண்டாவது வகைத் தொழிலில், படிப்படியாக சர்க்கார் வசம் வரும் தொழில்களும், நிர்மாணிக்கப்பட வேண்டிய புதுத் தொழில்களும் இருக்கும். இத் தொழில்களை நிறுவ சர்க்காருக்கு தனிப்பட்ட முதலாளிகளும் உதவிகரமாயிருப்பர். இவற்றில் 12 தொழில்கள் சேர்க்கப்பட்டுள்ளன;

3. இதில், மேலே குறிப்பிட்டவை நீங்கலாக எஞ்சிய தொழில்கள் அனைத்தும் இடம்பெறும். இவை அத்தனையும் தனிப்பட்ட முதலாளிகளின் ஏகபோக முயற்சியில் அடங்கிவிடும்.

கடந்த 1948-ம் ஆண்டில் வெளியிடப்பட்ட சர்க்கார் தொழில் கொள்கைக்குப் பதிலாக இப்புதுக் கொள்கை வகுக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

எதிர்காலத்தில், சர்க்காரின் பொறுப்பில் வளரவேண்டிய மூலாதாரத் தொழில்களின் எண்ணிக்கை 1948-ம் ஆண்டுக் கொள்கைப்படி 6 ஆக இருந்தது; ஆனால் இப்போது வெளியாகியுள்ள புதுக் கொள்கைப்படி அந்த எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது,

(1) ஆயுதங்கள், வெடி மருந்து, மற்றும் இதை ஒட்டிய பாதுகாப்புச் சாதனங்கள்; (2) அணுசக்தி; (3) இரும்பு-எஃகு; (4) கன இரும்பு-எஃகு வார்ப்படங்கள்; (5) சுரங்கம், இயந்திரக் கருவி உற்பத்தி, மத்திய சர்க்கார் குறிப்பிடும் மூலாதாரத் தொழில்களுக்கு வேண்டிய கனரக இயந்திரங்கள்; (6) ஹைட்ராலிக், டர்பைன்கள் உட்பட கனரக மின்சார இயந்திரங்கள்; (7) நிலக்கரி; பழுப்பு நிலக்கரி; (8) மண்ணெண்ணெய்; (9) இரும்பு, மாங்கனீஸ், குரோம், ஜிப்சம், கந்தகம், தங்கம், வைரம் ஆகிய தாதுப்பொருள்களை வெட்டி எடுத்தல்; (10) செம்பு, காரீயம், துத்தநாகம், தகரம் முதலியவற்றைச் சுரங்கத்திலிருந்து எடுத்துப் பக்குவப்படுத்துதல்; (11) 1953-ம் ஆண்டு அணுசக்தி உற்பத்தி உபயோகக் கட்டுப்பாடு ஷெட்யூலில் குறிப்பிட்ட கனிப்பொருள்கள்; (12) விமானம்; (13) விமானப் போக்கு-வரத்து; (14) இரயில்வே போக்கு-வரத்து; (15) கப்பல் கட்டும் தொழில்; (16) டெலிபோன், டெலிபோன் காபின், டெலிகிராப் வயர்லெஸ் சாதனங்கள்; (17) மின்சார உற்பத்தி, விநியோகம்—ஆகிய 17 மூலாதாரத் தொழில்களும் சர்க்காரே நேரடியாக மேற்கொள்ளுவனவாகும்.

மேலும் சிலவற்றை சர்க்கார் தனிப்பட்டவர்களுடன் கூட்டாகச் சேர்ந்து நடத்துவர்.

ஆற்காட்டில் அண்ணா

23—4—56 இரவு 9½ மணிக்கு, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்—மதுரம் அவர்களின் 'தளபதி' நாடகத்திற்கு அண்ணா அவர்கள் தலைமை தாங்கி, கலைவாணரையும், நாடகத்தையும் பாராட்டிப் பேசினார். உள்ளூர் தி. மு. க., நெசவாளர் சங்கங்களின் சார்பில் அண்ணா அவர்களுக்கு மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

எழுவாம்பாடி :

24—4—56ல், போளூருக்கு சமீபத்தில் உள்ள எழுவாம்பாடி கிராமத்தில் தி. மு. கழகச் சார்பில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. பஞ்சாயத்து போர்டு தலைவர் திரு கிருஷ்ணசாமி தலைமை தாங்கினார். கல்லூரி மாணவன் மு. வரதன், போளூர் சுப்பிரமணியம், ப. உ. சண்முகம் ஆகியவர்கள் பேசிய பின், அண்ணா அவர்கள் மாநில மாநாடு பற்றி விரிவுரையாற்றினார்.

எழுவாம்பாடி தி. மு. கழகம், மாணவர்கள் சார்பில் அண்ணா அவர்களுக்கு வரவேற்புரைகள் வாசித்தளிக்கப்பட்டன. இரண்டேரிப்பட்டு, பெலாசூர், போளூர் தி. மு. கழகங்கள் சார்பில் மாலை, கைத்தறி துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

பெயர் சூட்டல்

கூட்டத்தில் தோழர் பலராமன் அவர்கள் ஆண் குழந்தைக்கு 'வீரமணி' என்று அண்ணா அவர்களால் பெயர் சூட்டப்பட்டது. இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

அன்பளிப்பு

திருச்சூர் தோழர் குப்புசாமி அவர்கள் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தந்தார். ரூ. 2-ம் வரப்பெற்றோம்—நன்றி.

—பொறுப்பாளர்.

நெகமம் தி. மு. கழகம்

20—4—56ல் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், நெகமம் பஞ்சாயத்து போர்டு தலைவர் பதவி தேர்தலில் அபேட்சகராக நிற்கும் சுயேச்சையாளர் கி. கோ. கந்தசாமி அவர்களை ஆதரிப்பதென முடிவு செய்யப்பட்டது.

பாலூர்சத்திரம் தி. மு. க

21—4—56ல், நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், நெல்லை மாவட்டப் பிரதிநிதி ப. த தே. செல்லத்துரை அவர்களின் துணைவியார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

அறிவிப்பு

திருச்சி மாநில மாநாட்டிற்கு கிளைக் கழகங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் விபரங்கள் 'நம் நாடு' இதழுக்கு அனுப்பப்படுகின்றன. அவைகளை எல்லாம் பிரசுரிப்பதற்கு, இட நெருக்கடியால் இயலவில்லை.

அந்த விபரங்களை, தி. மு. கழகத் தலைமை நிலைய முகவரிக்கு அனுப்பவேண்டுகிறோம்.

—ஆசிரியர்.

நிதி மந்திரி போக்கிற்கு டாக்டர் நாயுடு கண்டனம்

‘கருத்து வேறுபாடு இருந்தால் பதவியிலிருந்து விலகுவதே நேர்மை’

‘தட்சிணப் பிரதேசத் திட்டத்தை ஆதரிப்போர் சட்டசபை முடிவைக் கவனிக்க வேண்டும்’

“பெரும்பாலும் தமிழர் வாழும் பகுதிகளைக் கொண்ட சென்னை மாநிலம் அமைய வேண்டுமென பெரும்பாலான வாக்குகளால் சென்னை சட்டசபை தீர்மானம் செய்திருப்பதின் விளைவாக தட்சிணப் பிரதேச திட்டம் செத்து விட்டதாகவே கருதவேண்டும். இந்தப் பிரச்சினையில், மந்திரி “சபையிலிருப்போருக்கு ஏதேனும் கருத்து வேறுபாடு இருக்குமானால், அவர்கள் தங்கள் வேறுபாடுகளுக்கு மந்திரிசபைக்குள்ளேயே பரிகாரம் தேடிக்கொள்ளவேண்டும். அதுதான் ஜனநாயக ஆட்சி முறையில் நியாயமான வழியாகும். அதை விட்டு, சட்டசபை ஒரு விவகாரத்தில் திட்டமான முடிவை மேற்கொண்டான பின்பு தங்கள் கருத்து வேறுபாடுகளை வெளிப்படையாகப் பேசிக்கொண்டிருப்பது முறையல்ல.

“சட்டசபையின் முடிவுக்கு ஒப்ப நடந்துகொள்ள முடியாத, மந்திரி சபையில் உள்ளோருக்கு உள்ள ஒரே யோக்கியமானவழி, பதவியிலிருந்து விலகிக்கொள்வதுதான்!

“தேசத்திற்காக உயிரையும் தியாகம் செய்தவர்களையும், நாட்டிற்காகப் பல தியாகங்கள் புரிந்த பொது மக்கள் தலைவர்களையும் உள்ளிட்டு, சட்டசபையின் பெரும்பான்மை உறுப்பினர்களையும் குற்றம் சாட்டும் வகையில், சுயால நோக்கம் கொண்ட சிலர், பொறுப்பற்ற முறையில் பேசிவருவதை, நம்முடைய முழு பலத்தையும் கொண்டு கண்டித்தாக வேண்டும்.

“தேசியம் பற்றி இராமநாதபுரம் ராஜா போன்றவர்கள் சிந்திக்காத காலத்திலேயே, தேசத்திற்கு உழைத்த தலைவர்களுடையவும், மக்களுடையவும் அபிமானத்தை முதன்மந்திரி காமராசர் பெற்றிருக்கிறார் என்பதை நாடு அறியும்.

“தேசியவளங்களை நேர்மையாக சமமாகப் பங்கிட்டுத்தர, டில்லி சர்க்கார், ஏற்கனவே சட்டமியற்றி வைத்திருக்கும்போது, கேரளத்தில் உள்ள பெரியாற்றிலிருந்து நமக்கு தண்ணீர் கிடைக்கும் என்றெல்லாம் நம் பிக்கையூட்டி, பிரதேச சுயாலக் கிளர்ச்சியிலீடுபடுவது, நேர்மையானதல்ல,”

என்று, பிரபல காங்கிரஸ் தலைவர் டாக்டர் பி. வரதராஜுலு(நாயுடு) எம் எல் ஏ. அவர்கள் 1—5—56 தேதியிட்டு பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாபெரும் மே தின ஊர்வலம்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

பேட்டை, மவுண்ட்ரோடு,வாலாஜா ரோடு, பெல்ஸ் ரோடு பைகிராப்ட்ஸ் ரோடு வழியாக திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்தது.

ஊர்வலம் முழுவதும் கழகத் தோழர்கள், தாயக விடுதலை—தொழிலாளர் நலன்கள்—சமுதாய விடுதலை பற்றிய கோஷங்களை முழக்கியவண்ணம் பவனிவந்தனர்

ஏற்கனவே கடற்கரையில் திரண்டிருந்த பல்லாயிரம் மக்களிடையே இந்த மாபெரும் ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களும் கலந்தபோது கண்ட காட்சி கண் கொள்ளாதது.

சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் மிகுந்த ஆர்வத்தோடும், எழுச்சியோடும் நடத்திய இந்த மாபெரும் ஊர்வலத்தையும், சிறப்பான பொதுக்கூட்டத்தையும் பொதுச்செயலாளர் வெகுவாகப் பாராட்டினார். கழகச் சார்பில் கழக நிர்வாகிகளுக்கு உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்தார்.

(ந. தி.)

★

கொடியேற்றல்

‘மே’ தினத்தை முன்னிட்டு, 1—5—56 காலை 9 மணியளவில் சென்னை—21 - வண்ணை (தியாகராயர் கல்லூரி சமீபம்) தி. பெ சாலை, எண். 131 இல்லக் கொடி மரத்தில் தி. மு. கழகக் கொடி ஏற்றுவிக்கப்பட்டது.

★

செஞ்சதுக்கத்தில் மே தின அணிவகுப்பு

மாஸ்கோ, மே. 1—

இலட்சக்கணக்கான தொழிலாளர்களும், போர்வீரர்களும் கலந்துக்கொண்ட மிகப் பெரிய மே தின அணிவகுப்பு மாஸ்கோ செஞ்சதுக்கத்தில் நடைபெற்றது.

லெனின் காட்டிய வழியைப் பின்பற்றி எல்லா நாட்டினருடன் தாங்கள் சமாதானமாகவும், நட்புறவுடனும் வாழவிரும்புவதாகவும், சர்வதேச நெருக்கடியைக் குறைக்க தொடர்ந்து முயலுவதாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் மார்ஷல் ஜுகாவ் அணிவகுப்பைப் பார்வையிடுகையில் கூறினர்.

சீனாவில் அணிவகுப்பு

5 இலட்சம்பேர் கலந்துகொண்ட மிகப்பெரிய மே தின அணிவகுப்பை சீனத் தலைநகரான பீகிங்கில், குடியரசுத் தலைவர் மோ-சே-துங் பார்வையிட்டார்.

வடக்கு வியட்நாம் :

தலைநகரில், இலட்சம் மக்கள் கொண்ட மே தினப் பொதுக்கூட்டம் ஒன்று வடக்கு வியட்நாம் தலைநகரில் நடைபெற்றது.

இலங்கை :

இலங்கையின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக ஆளும் கட்சியினர், மே தின விழாவில் முக்கியப் பங்கேற்றனர். அன்றியும் முதல் முறையாக மே தினத்துக்கு விடுமுறை வழங்கப்பட்டது. அரசினர் அலுவலகங்கள், பாங்குகள் யாவும் மூடப்பட்டன. 1-இலட்சம் மக்கள் விழாவில் பங்கேற்றனர் நகர மன்றத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரதமர் கலந்துகொண்டு பேசினர்.

மே விழாவில் துணைப் பொதுச்செயலாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனுல், திராவிட நாட்டில் அக்கோள்கையைப் புகுத்தும் முறையில் சோவியத் நாட்டு முறையைப் பின்பற்றுவது சரியானதல்ல; அதனுல், அக்கோள்கை வெற்றியறுவதற்குப் பதிலாக, மக்களிடையே அவநம்பிக்கையை அளிக்கிறது என்பதை நாம் காண்கிறோம்.

ஆதலால்தான், தி. மு. கழகம், நடுத்தர மக்களிடையேயும், பாட்டாளி மக்களிடையேயும் அக்கோள்கையை ஜனநாயக முறையில்—நம் நாட்டின் பண்பு, பழக்க வழக்கம், கலாச்சாரம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு பரவச் செய்யவும், வெற்றியுறச் செய்யவும் தி. மு. கழகம் பாடுபட்டு வருகிறது. எனவே, ‘நடைமுறையில்—தென்னகத்தைப் பொறுத்தவரை, பொதுவுடைமைக் கட்சி ஒன்று உண்டென்றால், அது திராவிட முன்னேற்றக் கழகமேயாகும்’—என்று நாம், நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் கூறியபோது, நம் நாட்டிலுள்ள கம்யூனிஸ்டு கட்சியினர் நம்மீது வருத்தப்பட்டனர்; குறை கூறினர்.

“ஆனுல், இன்று, சோவியத் நாட்டுத் தலைவர்களே தங்களின் முன்னைய போக்கு தவறு என்றும், ஜனநாயக அரசு முறை இனி உலகெங்கும் தழைக்கவும், அதற்கேற்ப மற்ற நாடுகளுடன் தோழமை கோள்ளவும் விரும்புவதாக வெளிப்படையாகக் கூறுகின்றனர். நம் நாட்டிலுள்ள கம்யூனிஸ்டு கட்சியினரும், சோவியத் நாட்டுத் தலைவர்கள் காட்டும் ‘ஜாடை’ அறிந்து அதற்கேற்ப தங்களின் போக்கினை மாற்றிக் கோண்டிருக்கின்றனர்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு மே தின விழாவில் நமது அண்ணு அவர்கள் எந்த கருத்தைக் கூறினுரோ—அதை இன்று நமது கம்யூனிஸ்டு தோழர்கள் மறைமுகமாக ஒப்புக் கொண்டிருக்கின்றனர். எனவே பாட்டாளி மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க அரசியலில் சிந்தித்துப் பணியாற்றி வருகிறது தி. மு. கழகம்—இனியும் தொடர்ந்து பணியாற்றவிருக்கிறது,”

என்று, 1—5—56 மாலை 7 மணிக்கு, குடியேற்றத்தில், தி. மு கழகச் சார்பில் நடைபெற்ற மே தின விழாவில் பேசுகையில், தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு ஏராளமான பொதுமக்களும், தொழிலாளர் தோழர்களும திரண்டிருந்தனர்.

தோழர் பொன்னுசாமி தலைமை வகித்தார். துவக்கத்தில் தோழர் பி. ஜி. இராசன் சிறிது நேரம் பேசினர்.

துணைப் பொதுச்செயலாளருக்கு கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

★

மேலும் தொடர்ந்து, துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் பேசியதாவது :—

“இந்த மகத்தான மே தின விழாவில் உலகத் தொழிலாளர்கள் அனைவரும் குதுகலமடைந்திருக்கின்றனர். உழைப்பாளரின் உரிமைக்காகக் கடந்த 70 ஆண்டுகளுக்கு முன்னர் போரிட்ட எல்லா வீரர்களுக்கும் நமது பணிவன்பான வணக்கத்தையும், அதே சமயத்தில் அந்த மாவீரர்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்து செய்யும் உறுதியையும் நாம் இன்று தெரிவித்துக்கொள்கிரோம்.

“சர்வதேச கண்ணேட்டத்தில் இம்முறையைப் பின்பற்றும் நாம், குறிப்பாக நமது மாநிலத்தின் உரிமை—மக்களின் வாழ்வு ஆகியவைகளையும் மனதில் கொண்டு, அதற்கு முட்டுக்கட்டையாயுள்ள பிற்போக்கு சக்திகளைத் தகர்த்தெறிய உழைப்பாளிகள் அனைவரும் உறுதி எடுக்கவேண்டுகிறேன்.

“மொழிவழி மாநில அமைப்பிலிருந்து, ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எதிராக ...

சித்தூர் மாவட்ட செயற்குழு அவசரக் கூட்டம்

“சித்தூர் மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுவின் அவசரக் கூட்டம் மாதாகோவில் வீதியில் இருக்கும் கழகக் கட்டிடத்தில் 6—5—56 பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்”

என்று, சித்தூர் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. பார்த்தசாரதி அறிவிக்கிறார்.

அபிவிருத்தி வரி விதிப்பிற்கு எதிர்ப்பு!

சௌராட்டிர மாநிலத்தில் கிளர்ச்சி வலுக்கிறது

ஆர்ப்பாட்டக்காரர்மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகம்

அபிவிருத்தி வரி விதிப்பை எதிர்த்து தொடர்ந்து நடைபெற்று வரும் கிளர்ச்சியின்போது இன்று போலீசார் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்மீது தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்தனர் என்று தெரிய வருகிறது.

சௌராஷ்டிர மாநில சர்க்காரின் அபிவிருத்தி வரி விதிப்புத் திட்டத்திற்கு எதிராக நடைபெறும் இந்தக் கிளர்ச்சி நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. கிளர்ச்சிக்காரர்களுக்கு மக்களின் ஆதரவு நிரம்ப இருப்பதாகக் கூறப்படுகிறது.

போலீசாரின் அடக்குமுறையினுல் ஊர்வலத்தில் வந்த பலருக்கு பலத்த காயம் என்றும் கூறப்படுகிறது.

★★★★★★★★★★★★★★★★★★

சுவைமிக்க கருத்துப் படையல் !

‘திராவிடன்’ மே தின சிறப்பு இதழ்

★

அறிஞர் அண்ணு அவர்களின் அரிய கருத்தோவியம்; ‘பொதுச் செயலாளரின் மே தினச் செய்தி; மற்றும் பல அரிய கட்டுரைகள், கண்கவர் முகப்பு ஆகிய சிறப்புகளுடன்

20 பக்கங்களாக

சென்னையில் 4-5-56 வெள்ளிக்கிழமையன்றும், வெளியூர்களில் 5-5-56 சனிக்கிழமையன்றும் வெளிவருகிறது.

விலை 4 அணு

பிரதிகளுக்கு உள்ளூர் விற்பனையாளரிடம் உடனே பதிவு செய்து கொள்ளவும்.

நிர்வாகி—‘திராவிடன்’ சென்னை-1

★★★★★★★★★★★★★★★★★★

டிக்கெட் இல்லா.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வின் அறிக்கையில் இந்தத் தகவல் காணப்படுகிறது.

அறிக்கை, மக்கள் சபையின் விவாதத்திலிருக்கிறது.

அமுல் வரை நம் நாடு அந்நிக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது. இந்த அவலநிலை ஒழிந்தால்தான் உழைப்பாளர்கள் என்றென்றும் ஓரளவாவது நிம்மதியாக வாழ முடியும். எனவே, அவ்வித மகத்தான பணிக்கு தி. மு. கழகம் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறது.

“இம்மாதம் 17-ந் தேதி முதல் 20-ந் தேதி வரை நடைபெறவிருக்கும் மாநில மாநாட்டில் அதற்கான முடிவெடுக்கவும் இருக்கிறது. அந்த முடிவுகளுக்கேற்ப உழைப்பாளர் பெருமக்களும், நடுத்தர மக்களும் மேலும் மேலும் பேராதரவு தந்து, நமது நாட்டில் அரசியல்—சமூக—பொருளாதார விடுதலைக்கு ஆவன செய்ய வாரீர் என்று உங்களை எல்லாம் தி. மு. கழகச் சார்பில் அன்புடன் அழைக்கிறேன்.”

தில்லுமுல்லுகளால் வெற்றி பெற்ற நிதி மந்திரிக்குத் ‘தண்டனை’

6 ஆண்டுகளுக்கு தேர்தலில் நிற்கவும் கூடாது; வாக்களிக்கவும் கூடாது

ஜெய்ப்பூர், மே 1—

திருட்டுத்தனங்கள் செய்து, தேர்தலில் வெற்றிபெற்று, மந்திரியாக பவனிவரும் ஒருவரது தேர்தல் செல்லாதென தேர்தல் நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

பிரிஞ்சுந்தர் சர்மா என்பார், கிரான்ஜ் தொகுதியிலிருந்து, இராஜஸ்தான் சட்ட சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, இப்போது நிதி மந்திரியாகப் பணியாற்றிவருகிறார்.

அவர் தேர்தல் காலத்தில் தில்லுமுல்லுகள் செய்து வெற்றிபெற்றதாக தேர்தலில் அபேட்சை மனு நிராகரிக்கப்பட்ட ஒருவர் வழக்குத் தொடர்ந்தார்.

மூவரடங்கிய தேர்தல் நீதிமன்றம் வழக்கை விசாரித்துவிட்டு, நிதிமந்திரி தில்லுமுல்லுகள் செய்ததாகக் கண்டு, அவரது தேர்தல் செல்லாதெனத் தீர்ப்பு வழங்கியதோடு, இன்னும் ஆறு ஆண்டு காலத்திற்கு அவர், மக்கள்சபை அல்லது எந்த ஒரு மாநிலத்தின் சட்டசபை இவற்றிற்கு தேர்தலில் நிற்கக்கூடாது என்றும், ஆறு ஆண்டுகாலத்திற்கு எந்த ஒரு தேர்தலிலும் வாக்களிக்கக்கூடாது என்றும் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்திருக்கிறது.

அத்துடன், வழக்குத் தொடுத்த அபிநாகரி என்ற தோழருக்கு செலவுத் தொகையாக ரூ. 500 தர வேண்டும் என்றும் தீர்ப்புக் கூறப்பட்டிருக்கிறது.

தேர்தல் நீதிமன்றத்தின் மூவரில் இருவர், ‘தோழர் அபிநாகரியின் அபேட்சை மனு நிராகரிக்கப்பட்டது முறையற்றது’ எனவும் தீர்ப்புக் கூறியிருக்கின்றனர்.

நிதி மந்திரியின் தேர்தல் செல்லாது என்பதற்காகக் கூறப்பட்ட காரணங்களுள், அவர், சர்க்கார் ஊழியரான எஞ்சினீயர் ஒருவரை தமக்குத் தேர்தலில் வேலை செய்யுமாறு பணித்தார் எனவும், அந்த எஞ்சினீயரும் இவருக்கு ஆதரவு திரட்டும் பணியில் ஈடுபட்டதாகவும் கூறப்பட்டது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.